DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, VELLORE DISTRICT

Name:வெங்கடாசலம்

Father's Name: சீனிவாசன்

Village: ஆவாரகுப்பம்

Taluk:
Caste:
Calling:
Religion:
Age: 60

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 04.07.2023

I.A 300/2018 O.S No.58/2017 RW1

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

1. இந்த மனு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும். மனுதாரர் எதற்காக இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சொத்து எனக்கு சொந்தமானது அதை அவருக்கு சொந்தமானது என்று கேட்டு தாக்கல் செய்துள்ளார். மனு சொத்து மனுதாரருக்கு அவரது தாத்தா எழுதிக்கொடுத்த உயில் மூலமாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கான பட்டா, சிட்டா உள்ளிட்ட வருவாய் துறை ஆவணங்கள் மனுதாரர் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான், ஆனால் சுவாதீனம் என்னிடம் தான் இருக்கிறது. மனு சொத்து சுவாதீனம் என்னிடம் தான் உள்ளது என்பதற்கு ஆவணம் எதாவது இம்மனுவில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. நான் 1987 ம் ஆண்டு கிரையம் பெற்றிருப்பதாக சொல்லியிருப்பது யாரிடமிருந்து என்றால் சிவராஜ் மற்றும் சக்கரவர்த்தி ஆகியோர்யிடமிருந்து கிரையம் பெற்று அதில் 2 தென்னை மரம் மற்றும் 5 புளிய மரம் வைத்து வளர்த்து வந்துள்ளேன்.

2. 1987 ம் ஆண்டு முதல் என் பெயரில் வருவாய்த்துறை ஆவணங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான், நான் மனு கொடுத்தோம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. வழக்கு சொத்தில் உள்ள 2 தென்னைமரம் மற்றும் 5 புளியமரங்கள் எனது சுவாதீனத்தில் தான் இருந்து வருகிறது என்பதை நிரூபிக்க ஆவணம் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் கிரையம் பெற்றதாக சொல்லும் கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை அளக்க வந்த போது நான் அங்கு இருந்தேனா என்றால் நான் அங்கு இருக்கவில்லை.

3. நீதிமன்ற ஆணையர் மனு சொத்தை அளக்க வந்த போது நான் அவரிடம் மனு ஒன்றை அளித்தேன் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. நீதிமன்ற ஆணையர் நான் அளித்த மனு தொடர்பாக அவரது அறிக்கையில் என்ன விளக்கம் அளித்துள்ளார் என்பதை நான் ஆணையர்

அறிக்கையை படித்து தெரிந்து கொண்டேனா என்றால் நான் படித்து பார்க்கவில்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் எனது கிரைய ஆவணத்திலுள்ள செக்குபந்தியின் படி நிஜத்தில் இல்லையென தெரிவித்துள்ளார் என்றால் அது சரியல்ல, எனது கிரைய ஆவணத்தின் படி தான் உள்ளது.



4. அசல் வழக்கு தாக்கல் செய்த போதே நான் வழக்கு சொத்திற்குள் நுழைய கூடாது என்று கேட்டு இடை மனு தாக்கல் செய்து அந்த மனு அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் நீதிமன்ற உத்தரவை மீறி அச்சொத்திலுள்ள புளியமர மகசூலை பறிக்க அத்துமீறி நுழைந்தேன் என்று சொன்னால் சரியல்ல, நான் அவ்வாறு செய்யவில்லை. 25.01.2018 அன்று என் மீதும், என் மனைவி மீதும் மனுதாரர் திம்மாம்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தாரா என்றால் ஆமாம் அளித்தார், ஆனால் அது பொய் புகாராகும். அந்த புகாரின் அடிப்படையில் போலிசார் என்னையும், என் மனைவியையும் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள்.

5. அந்த விசாரணையின் போது நானும், எனது மனைவியும் இனிமேல் வழக்கு சொத்தில் நுழைந்து புளியபழம் பறிக்க மாட்டோம் என எழுதிக்கொடுத்தோமா என்றால் எழுதிக்கொடுத்தோம், ஆனால் நீதிமன்ற உத்தரவை மீற மாட்டோம் என்றே எழுதிக்ககொடுத்தோம், அந்த சொத்தில் நாங்களும் நுழைய வில்லை, மனுதாரரும் நுழையவில்லை. 2018 ம் ஆண்டு என் மனைவி கவுன்சிலராக இருந்தரா என்றால் இல்லை. என் மனைவி எப்போது கவுன்சிலராக இருந்தார் என்றால் 15 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தார், எனக்கு வருடம் சரியாக தெரியவில்லை.

6. என் மனைவி 2018 ம் ஆண்டு வாக்கில் கவுன்சிலராக இருந்து வந்தார் என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல, என் மனைவி அப்போது கவுன்சிலராக இருக்க வில்லை. என் மனைவி மணிமேகலையை இந்த மனுவில் சாட்சியாக விசாரிக்க உள்ளோமா என்றால் இல்லை.

(மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோலின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)